இந்தியப் பொருளாதாரம்

1. வாணிப நடவடிக்கையில் முற்றுரிமை தடைச்சட்டம் (MRTP Act), 1969 ஆனது ரத்து செய்யப்பட்டு போட்டிச் சட்டம் 2002-ற்கு இக்காலத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டது.
(A) 2002 **(B) 2009** (C) 2013 (D) 2016

2. S.N. அகர்வாலா உருவாக்கிய காந்தியத் திட்டத்தின் அடிப்படை நோக்கமானது
(A) வேளாண்மை வளர்ச்சி
(B) குடிசை மற்றும் கிராமிய தொழிலகங்களின் வளர்ச்சி
(C) சமத்துவத்தை அடைவது
(D) ஒட்டுமொத்த இந்தியாவின் மூலம் மற்றும் கலாச்சார நிலையினை உயர்த்துதல்

3. நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்கள் சிலவற்றின் மீது வரி விதிக்கப்படுகின்றது. இது மைய அரசுக்குச் செல்கின்றது. அந்த வரி
(A) நேர்முக வரி (B) மறைமுக வரி
(C) கலால் வரி (D) சேவை வரி

4. தீவிர மாவட்ட வேளாண் திட்டம் தொடர்பான முதல் படிநிலை இந்த ஆண்டு துவங்கப்பட்டது.
(A) 1951-52 **(B) 1960-61** (C) 1965-66 (D) 1990-91

5. தமிழ்நாடு அரசின் "புது வாழ்வு திட்டம்" தொடர்பான கீழ்க்கண்ட கூற்றுகளில் எவை சரியானவை?
1. இத்திட்டம் 2005-ல் தொடங்கப்பட்டது
2. உலக வங்கி இதற்கு நிதி உதவி வழங்குகிறது
3. இதற்கான திட்டசெலவு 1,667 கோடி ரூபாய்
4. தமிழ்நாட்டில் 26 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது
(A) அனைத்து கூற்றுகளும் சரி
(B) (1), (2) மற்றும் (3) சரியானவை
(C) (2), (3) மற்றும் (4) சரியானவை
(D) (1), (2) மற்றும் (4) சரியானவை

6. தமிழ்நாட்டில் எவ்வளவு சதவீதத்தில் மொத்த பயிர் சாகுபடிப் பரப்பில் மானாவாரிப் பகுதியில் பயிரிடப்படுகிறது?
(A) 55% (B) 57% **(C) 54%** (D) 52%

7. பயிரிடக்கூடிய நிலங்கள் ஒன்று முதல் ஐந்து ஆண்டுகள் வரை உழப்படாத பொழுது, அது இவ்வாறு அழைக்கப்படுகிறது?
(A) பயன்பாடற்ற விளைநிலம் (B) பாண்டு தரிசு
(C) பிற தரிசு (D) நிலையான மேய்ச்சல் நிலம்

8. _____ லிருந்து இந்தியாவில் மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடங்கப்பட்டது.
(A) 1862ம் வருடம் **(B) 1872ம் வருடம்**
(C) 1882ம் வருடம் (D)1892ம் வருடம்